[1987 மே 5

அவர்கள் வாங்கிய பணத்தில் இருந்து அவர்கள் சொன்ன பிரகாரம் வீடு கட்டாமல் இருக்கிறது. அடித்தளத்திற்கு பேஸ் மட்டத்தில் இருந்து இரண்டாவது கட்டம் முடிக்காமல் இருக்கின்ற காரணத்தினாலே, மூன்றாவது கட்டத்திற்கான தவணை கொடுக்கப்பட முடியாமல் இருக்கின்றது. அந்தப் பணியை முழுமையாகச் செய்வார்களானால் தவணைக்குரிய பணம் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வாலாஜாபாத் யூனியன் காமாட்சி அம்மன் நூற்பாலை

602—(*வினா எண் 9845) திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபாத் யூனியனில் உள்ள காமாட்சியம்மன் நூற்பாலை நஷ்டத்தில் இயங்குகிறதா அல்லது லாபத்தில் இயங்குகிறதா?

(ஆ) இந்த நூற்பாலைக்கு பஞ்சு எங்கிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது?

(இ) உற்பத்தியாகும் நூல்கள் எம்முறையில் விற்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) வாலாஜாபாத் யூனியனில் உள்ள காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை நஷ்டத்தில் இயங்குகிறது. நூற்பாலைக்குத் தேவையான பஞ்சு தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படுகிற நூல் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. வழங்கப்பட்டது போக மீதம் இருக்கிற நூல் வெளிச் சந்தையிலே விற்கப்படுகிறது.

திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு நூற்பாலைக்கு அரசு மூலம் ஏதாகிலும் நிதி வழங்கப்பட்டுள்ளதா? மேலும் கூட்டுறவு நூற்பாலைகள் சிறந்த முறையில் இயங்க அதனுடைய வளர்ச்சியைக் கருதி நிர்வாகக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

1987 மே 5]

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தரப்பிலே ஏற்கெனவே அங்கே நிர்வாக இயக்குநர் இருக்கிறார். அரசு சார்பிலே சமீப காலத்தில் நிதி ஒன்றும் கூட்டுறவு ஆலைக்கு வழங்கப்படவில்லை. நஷ்டத்தில் இயங்குகின்றதை லாபத்தில் இயங்க வைக்க நிர்வாக இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைத்து, அந்தக் குழு இதில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசி ஆலையை லாபத்தில் இயங்க வைக்க முயற்சி செய்யும்.

திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழுவில் யார் யார் இடம் பெறுவார்கள் என்பதைப் பற்றி அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைரக்டர் ஆஃப் ஹேண்ட்லூம் அண்ட் டெக்ஸ்டைல்ஸ், சம்பந்தப்பட்ட ஆலையின் நிர்வாக இயக்குநர் அதாவது எம்.டி., மற்றும் பினான்சியல் அட்வைசர்ஸ் மற்றும் நூற்பாலைக்கு நிதி வழங்கியிருக்கிற வங்கியின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய குழு மூலம் பேச்சுவார்த்தை நடத்தி மேற்கொண்டு நூற்பாலையை லாபத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. டி. என். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மில் நஷ்டத்தில் இயங்குவதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் இங்கே என்ன பிரச்சினை என்றால் ரா மெட்டீரியலை அதாவது பஞ்சை மில்லின் எம்.டி. மட்டும் வாங்குகிறார். அவர் பஞ்சை வாங்கும்போது எந்த விலைக்கு வாங்குகிறார், மற்றும் அதற்கான காரணங்களை எல்லாம் சொன்னாலும் கூட பஞ்சை வாங்கும்போது ஒரு கமிட்டி இருந்து, அந்த கமிட்டி நிர்ணயம் செய்கின்ற விலையை ஒப்புக்கொண்டு அந்த விலைக்கு பஞ்சை கொள்முதல் செய்தால் இன்றையதினம் நாம் உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும். இதை மனதிலே கொண்டு பஞ்சை வாங்குவதற்கு முன்பு எம்.டி. இந்தக் குழுவை கலந்தாலோசித்த பிறகு தான் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற ஆணையைப் பிறப்பிக்க இந்த அரசு முன்வருமா?

[1987 மே 5

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கெனவே ஆணையிட்டிருக்கிறது. அதன்படி ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலை நிர்வாக இயக்குநரும் தாமாக பஞ்சை வாங்க முடியாது. கோவையில் இருக்கிற தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேசனுக்கு எவ்வளவு தேவை என்பதை எழுதி அனுப்ப வேண்டும். மாசா மாசம் கூட்டம் நடத்தப்பட வேண்டும். அந்தக் கூட்டத்தில் நிர்வாக இயக்குநர் பரிசேஸ் செல் மூலம்தான் வாங்க வேண்டும். ஆக, அந்தக் குழு மூலம் தான் வாங்கப்படுகிறது. தனியாக எந்த நிர்வாக இயக்குநரும் தாமாக ஆலைக்கு வேண்டிய பஞ்சை வாங்குவதில்லை.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குகிறது. இதுபற்றி நிர்வாக இயக்குநரை அணுகிகேட்டால், அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற நூலை கோவாப்டெக்ஸ் மூலமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்ற காரணத்தால்தான் மார்க்கெட்டில் நூல் விலை அதிகமாக இருந்தாலும் இங்கே இவர்கள் நிர்ணயித்திருக்கின்ற விலை குறைவாக இருப்பதால் இவர்களுக்கு நூலை குறைந்த விலைக்கு வழங்குவதால் தான் இப்படிப்பட்ட நஷ்டம் கூட்டுறவு நூற்பாலைக்கு ஏற்படுகிறது என்று காரணம் கூறுகிறார்கள். ஆகவே, விலைக்கு விற்கப்படுகின்ற நூலின் விலையில் மாற்றம் செய்தாலே லாபம் வரும் என்று சொல்கிறார்கள். அதோடு கூட அவர்கள் 50 லட்சம் ரூபாய் வேண்டுமென்று அரசாங்கத்திலேயிருந்து கடன் கேட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற இயந்திரங்கள் எல்லாம் புதியவை. அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களும் அனுபவம் வாய்ந்தவர்கள். ஆக, அந்த ஆலை சரியாக உற்பத்தி செய்தாலும்கூட நூலை குறைந்த விலைக்கு கோவாப்டெக்ஸ் மூலமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதால் தான் நஷ்டம் ஏற்படுகிறது என்று தொடர்ந்து அந்த நிர்வாகம் சொல்கிறது. எங்கள் தாலுக்காவில் இருப்பது இந்த ஒரே ஒரு கூட்டுறவு நூற்பாலை மட்டும் தான். என்றைக்கு அந்த ஆலையை மூடுவார்களோ என்கிற பயம் அங்கே இருக்கிறது. ஆகவே அவர்கள் கேட்டுள்ள 50 லட்சம் ரூபாயை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்க அதற்குண்டான ஏற்பாடுகளை செய்ய முன்வருவார்களா?

1987 மே 5]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, கூட்டுறவுத் துறையிலே 18 நூற்பாலைகள் இயங்குகின்றன. தமிழ்நாட்டில் 350 நூற்பாலைகள் தனியார் துறையில் இருந்தாலும், இவைகள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருப்பதே கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வழங்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே, இவைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வழங்கிக் கொண்டிருப்பதை நிறுத்த முடியாது. வெளி மார்க்கெட்டில் விற்பதை விட கொஞ்சம் விலை குறைவாகக் கொடுத்தால்தான் நாம் நெசவாளர் பெருமக்களுக்கு நன்மை செய்வதாக இருக்கும். மேலும் கமிட்டி நிர்ணயம் செய்கின்ற விலைக்குத்தான் விற்கக்கூடிய நிலை இருக்கிறது. அதோடு ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலையிலேயும் உற்பத்தியாகின்ற நூல் முழுவதையும் அப்படியே கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவைகள் வழங்குவது கிடையாது. மூன்றில் ஒரு பங்கை தான் வழங்குகிறார்கள். மூன்றில் இரண்டு பங்கு நூலை அவர்கள் வெளி மார்கெட்டில் விற்கலாம். ஆக, வெளி மார் கெட்டில் மூன்றில் இரண்டு பங்கு நூலை அதிக விலைக்கு விற்பதன் மூலம்தான் இந்த ஆலைகளை லாபத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே அவர்கள் நூலை கொடுக்க முடியாது என்று சொல்ல வழியில்லை. அது போல இன்றைக்கு எல்லா நூற்பாலைகளும் அரசிடம் கடன் கேட்கின்றன. அந்தந்த ஆலைகளுக்கு ஏற்ப அரசு தனியாக நிதித் துறையோடு கலந்து இது குறித்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஊட்டச்சத்து அலுவலர் பதவியிடங்கள்

603—(* வினா எண் 7352) திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல மாவட்டங்களில் மாவட்ட ஊட்டச்சத்து அலுவலர்கள் பதவி காலியாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நிரப்ப அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?